# கவிஞர் பிறைசூடன் கவிதைகளில் சமுதாய சிந்தனைகள்

* இரா. மகேஸ்வரி,
**முனைவர் ம. கலைமாமணி,

## ஆய்வுச் சுருக்கம்

கவிஞர் பிறைசூடனின் கவிதைகள் அவருக்கு ஏற்பட்ட வாழ்க்கை அனுபவங்கள், சமுதாய அனுபவங்கள் அவரைச் சமுதாயச் சிந்தனைகளைத் தூண்டும் கருத்துக்களை எழுது வைத்தது.சமூகத்தில் நடக்கும் கொடுமைகளை தட்டிக் கேட்கும் உரிமை கவிஞனுக்கு இருக்கிறது. 'கவிஞன் ஒரு காலக் கண்ணாடி' அந்தக் காலத்தை வெளிப்படுத்தவது கவிஞனுடைய கடமை, இல்லையென்றால் இவன் கவிஞனே அல்ல. பிறைசூடனின் கவிதைகளில் சமுதாயச் சிந்தனைகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை அறிவதும். அவற்றை எவ்வாறு அமைத்துள்ளார் என்பதை அறிவதும் நோக்கமாகும். இன்றைய சமுதாயப் பிரச்சனைகளான இளைஞர்களின் நிலை, ஏழை – விவசாயிகளின் அவலக்குரல், சமதர்மச் சிந்தனை, இன்றைய சமுாயத்தின் அவலநிலை, சாதிப் பிரச்சனை போன்ற பிரச்சனைகள் கவிஞர் பிறைசூடன் கவிதைகள் மூலம் எவ்வாறு சமூகத்துக்குப் பயன்படும் வகையில் கூறப்பட்டுள்ளன என ஆராயப் பெற்றன.

**குறிச் சொற்கள்**: பிறைசூடனின் கவிதை, காலக் கண்ணாடி, கவிஞனுடைய கடமை, இளைஞர்களின் நிலை, சமதர்மச் சிந்தனைஇ உழுதவன் கணக்கு, வெற்றிடம் கிடைத்தால்

"சமுதாயத்தை அப்படியே தத்ரூபமாகப் பிரதிபலிப்பதே கலை என்ற கூற்று நோக்கத்தக்கது. இவர் "Art for arts Sake" ஆர்ட் ஷேக் என்பது மேலைநாட்டவரின் இலக்கியக் கொள்கை என்று கீழை நாட்டார் இலக்கியக் கொள்கையாக Art for life's Sale ஆர்ட் பார் லைப்ஸ் ஷேக் என்பதையும் சுட்டிச் சொல்கிறார்"1

"சமுதாயத்தினை நெறிப்படுத்துவதே எழுத்தாளனின் தலையாய கடமையாகும். அவன்தான் காணும் சமுதாயத் தீமைகளை மறைக்கக் கூடாது. எழுதியே தீர வேண்டும். ஆனால் அவற்றை வெளிப்படுத்துகிற முறை நாகரீகமாகவும், நுட்பமாகவும் இருக்க வேண்டும்"2 என்பது ம.திருமலையின் கருத்தாகும்.

இந்த ஆய்வாளர்களின் கருத்துக்களை ஒத்தே பிறைசூடனின் கவிதைகள் அமைந்துள்ளன. அவருக்கு ஏற்பட்ட வாழ்க்கை அனுபவங்கள், சமுதாய அனுபவங்கள் அவரைச் சமுதாயச் சிந்தனைகளைத் தூண்டும் கருத்துக்களை எழுது வைத்தது.

சமூகத்தில் நடக்கும் கொடுமைகளை தட்டிக் கேட்கும் உரிமை கவிஞனுக்கு இருக்கிறது. 'கவிஞன் ஒரு காலக் கண்ணாடி' அந்தக் காலத்தை வெளிப்படுத்தவது கவிஞனுடைய கடமை, இல்லையென்றால் இவன் கவிஞனே அல்ல. "இந்தச் சமூகத்தைத் தட்டிக் கேட்பவர்களுக்குத் தனிமனித ஒழுக்கம் வேண்டும். இல்லாதவர்கள் எல்லாம் இன்று தலைவனாக இருக்கும் பட்சத்தில். இந்தச் சமுதாயத்தைத் தட்டிக் கேட்கும் பொறுப்பு கவிஞனுக்கு ஏற்படுகிறது."3 என்று கவிஞரே சொல்கிறார்.

பிறைசூடனின் கவிதைகளில் சமுதாயச் சிந்தனைகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை அறிவதும். அவற்றை எவ்வாறு அமைத்துள்ளார் என்பதை அறிவதும் இவ்வியலின் நோக்கமாகும்.

---

*ஆய்வாளர், தமிழ்த்துறை, திராவிட பல்கலைகழகம், குப்பம், ஆந்திர பிரதேசம்
**உதவி பேராசிரியர், தமிழ்த்துறை, அரசுக் கலைக்கல்லூரி, திருவண்ணாமலை

**இளைய சமுதாயத்திற்கு வேண்டுகோள்**

இன்றைய சமுதாயத்தில் இளைஞர்கள் வாழ்க்கையை எதிர்நோக்கும் தன்மை இல்லாதவர்களாக இருக்கிறார்கள் தோல்வியைக் கண்டு துவண்டு விழுகின்றனர். அத்தகைய இளைய சமுதாயத்தினைப் பார்த்து கவிஞர் வேண்டுகோள் விடுக்கின்றார்.

தலையெடுக்க முடியவில்லை தடுக்கல்கள்
தர்மத்தோடு வாழ்வதால் வந்த தவறுகள்
எங்கு தேடியும் விடையில்லை
எந்த சாமியும் தரவில்லை
நொந்து போனேன் மனம் வெந்து போனேன்
கழுத்தையறுத்தும் கவலையின்றிக்
கண்முன் நிமிரும் கவின்வாழை
என்முன் சிரித்தது
எனக்கு எல்லாம் புரிந்தது
கழுத்தறுப்பவர்கள் முன்
தலையெடுக்கிறேன் என்ற சபதம் எழுந்தது
ஆமாம் எனக்கு ..........
வாழ்க்கை புரிந்தது
வாழையைப் பற்றியும் தெரிந்தது 4

'வாழைக் கழுத்து' என்ற தலைப்பில் அமைந்த கவிதையில் கவிஞர் வாழ்க்கையின் நுட்சுமத்தை அறியாமல் தவிப்பவர்களைப் பார்த்து அதை அறிந்து கொள்ளும் வழிமுறைகளைக் கூறுகிறார்.

வாழ்க்கைப் பயணத்தின் வழுக்கல்கள்
காலைவாரி விடுகின்ற சறுக்கல்கள்
விதி என்று அறியாத கிறுக்கல்கள்
ஏனிப்படி என்று புரியாத நெருடல்கள் 5

என்று தவிக்கும் உள்ளங்களைப் பார்த்து. அதுவும் குறிப்பாக இளைஞர்களைப் பார்த்து அடிகளைப் படிகளாக்குங்கள் என்று அறைகூவல் விடுகிறார்.

"முதலில் பெரியவர்களை ஏற்றுக் கொள்ளுங்கள்
சாதனையைக் கண்டு அஞ்சாதீர்கள் !
சாதனையாளர்களை வணங்குங்கள்" 6

எந்தக் காலத்திலும் சாதனை என்பது மாற்றக் கூடியது. முறியடிக்கக் கூடியது. சேற்றில் கிடக்கும் செந்தாமரை சேற்றினைப் பார்த்திருந்தால், அதனைக்கண்டு அஞ்சியிருந்தால் கோவில் வாசலில் போய் சேர முடியாது. சாதியையோ, அடிப்படைப் பொருளாதார வசதியையோ குறை சொல்வதை விட்டு அவர்கள் வாழ்ந்த சூழநிலையில் உங்களுக்கு என்ன செய்திருக்கிறார்கள் என்று பாருங்கள் என்கிறார்.

கம்பனைக் கண்டு பாரதி பயந்திருந்தால் ஒரு பாரதி உருவாகியிருக்க முடியாது. பாரதி பாரதிதாசனைக் கண்டு மற்றவர்கள் பயந்திருந்தால் ஒரு கண்ணதாசன் உருவாகியிருக்க முடியாது. கண்ணதாசனைக் கண்டு மற்றவர்கள் பயந்திருந்தால் தற்பொழுது உள்ளக் கவிஞர்கள் உருவாகி இருக்க முடியாது.

பெரியோர்களை ஏற்றுக் கொள்ளுங்கள் அவர்கள் சாதனையை விமர்சிக்காதீர்கள்.
எதைக் கண்டும் அஞ்சாதீர்கள். அவமானங்கள் இல்லாமல் வெகுமானங்களோ, தன்மானங்களோ யாருக்கும் கிடைக்காது. "சுத்தியினாலேயும். நெருப்பினாலேயும் அடிப்பதைக் கண்டு பயந்திருந்தால் தங்கம் ஜொலிக்கவே ஜொலிக்காது"7 அதனால் அடிகளைத்

தாங்கிக் கொள்ளுங்கள். அதைப் படிகளாக மாற்றிக் கொள்ளுங்கள். வாழையானது எத்தனை முறை அதன் கழுத்தை அறுத்தாலும், அதற்காகப் பயப்படாமல் மேலும் மேலும் துளிர்விட்டுக் கொண்டுதான் இருக்கிறது. அதுபோல் எத்தனை அடிகள் உங்கள்மேல் விழுந்தாலும் உங்கள் எண்ணங்களை, நம்பிக்கையை, குறிக்கோளினை விட்டுவிடாதீர்கள். வாழ்க்கையை வாழக் கற்றுக் கொள்ளுங்கள் என்கிறார் கவிஞர். ஆ. தமிழ்க்கண்ணன் வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது.

வாழ்க்கை ?
வாழ்க்கை !
வாழ்க்கை
வாழ்க்கை....

வாழ்க்கை முதலில் எல்லோருக்கும் கேள்விக் குறியாக உள்ளது. எப்படியாவது வாழ்வது ஒரு வாழ்க்கை. இப்படித்தான் வாழ வேண்டும் என்று ஒரு கொள்கையுடன், ஓர் உயர்ந்த குறிக்கோளுக்காக வாழ்வது மற்றோர் வாழ்க்கை. இவ்விரண்டில் இரண்டாவது தான் மிகச் சிறந்த வாழ்க்கை என்கிறார். அதை அடைய நமக்குள் ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டால் நமது வாழ்க்கை சிறந்த வாழ்க்கையாக அமையும் என்கிறார். நமது முன்னேற்றத்தைத் தடுக்கும் தடைக் கற்களைப் படிக்கற்களாக மாற்ற வேண்டும்.

"எல்லோர் வாழ்விலும் தோல்வி உண்டு. அதற்கு சூழ்நிலைதான் காரணம் புலம்பிக் கொண்டிருக்காமல், நாம் தான் சூழ்நிலையை உருவாக்கும் காரணகர்த்தா"8 என்பதை உணர வேண்டும் என்கிறார். எதிர்காலத்தைப் பற்றி நினைக்காமல் திட்டமிடாமல், செயல்படாமல் இருந்தால் நம் வாழ்க்கை இருளில் மூழ்கி விடும்.

"அருமை உடைத்தென்ற அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்"9

நம்பிக்கை என்பது ஐந்தெழுத்து வார்த்தைதான், ஆனால் அது இல்லையென்றால் வாழ்க்கையே இல்லை. "ஒவ்வொரு மனிதனும் முதலில் நம்மிடம் நம்பிக்கை வைக்க வேண்டும். எதையும், எல்லாவற்றையும் சாதிக்கும் ஆற்றல் நம்மிடம் இருக்கிறது"10 என்கிறார் விவேகானந்தர் நம்பிக்கையில் சிறந்தது தன்னம்பிக்கை, நம் வெற்றிக்குத் தடையாக இருப்பது அவநம்பிக்கையாகும். தன்னம்பிக்கை ஒரு மனிதனை உயர்த்துகிறது. ஆனால் தலை கர்வம் ஒருவனைத் தாழ்த்துகிறது. சுயமதிப்பு இருக்க வேண்டும். ஆனால் சுயகர்வம் கூடாது. இவை இரண்டிற்கும் இடையில் ஒருநூல் போன்ற இடைவெளி உள்ளது. அந்த இடைவெளி அறுந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் வெற்றி அடைய முடியும். அடுத்து வாழ்க்கையில் முன்னேற விடாமுயற்சி என்பது மிகவும் அவசியாகும். விடாமுயற்சி வேண்டும். ஆதலால்தான் "விடாது முயற்சி செய்து வருபவனுக்கு வெற்றி நிச்சயம் கிடைக்கும்" என்கிறார் நெப்பபோலியன்

விடாமுயற்சிக்கு சான்றாக ஆப்ரகாம் லிங்கனைக் குறிப்பிடலாம். 1831 முதல் 1859 வரை தோல்விகளையே சந்தித்த அவர், தன் முயற்சியிலிருந்து பின் வாங்கவில்லை. தோற்ற போதெல்லாம் தோல்விதான் வெற்றிக்கான படிக்கட்டுக்கள் என்று நினைத்துக் கொண்டு முயற்சி செய்து கொண்டே இருந்தார். 30 வருடங்கள் கழித்து வெற்றி பெற்றார்.

"முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்"
"முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்"11

குறிக்கோள், தன்னம்பிக்கை, விடா முயற்சி இருந்தால் வாழ்க்கையில் எத்தகைய இடையூறுகள் வந்தாலும் அதையெல்லாம் முறியடித்து விடலாம். ஏழை விவசாயியின் நிலைமை ஏழை விவசாயிகள் பல இன்னல்கள் பட்டு பயிர்த்தொழிலைச் செய்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கு அந்தத் தொழிலில் மனநிறைவு இருக்கிறதா ? என்றால்

இல்லையென்று தான் சொல்ல வேண்டும். அத்தகைய உழவர்கள் படும் பாட்டினைக் கவிஞர் பிறைசூடன் தனது கவிதை மூலம் கூறுகிறார்.

உழுதவன் கணக்குப் பார்த்தா உழக்கு மிஞ்சாது பழமொழி
உழுது அவன் கணக்குப் பார்த்தா உனக்கு மிஞ்சாத என மொழி 12

'உழுதவன் கணக்கு' என்ற தலைப்பில் அமைந்த இந்தக் கவிதையில் பிறைசூடன் ஏழை விவசாயியின் அவலக் குரலினைப் படம்பிடித்துக் காட்டுகிறார். நமது நாடு விவசாய நாடு. நூற்றுக்குத் தொண்ணூறு பேர் விவசாயிகளாகவே இருக்கின்றார்கள். அங்ஙனமிருந்தும், விவசாயத்தைச் செழுமைப்படுத்த நம் அரசாங்கத்தார் பெருமுயற்சி செய்ய வில்லை. அரசாங்கத்தார் செய்து வரும் சிறு முயற்சியாலும் பெரும்பயன் விளையவில்லை. பண்டைக் காலத்தில் நம்மவர் மேற்கொண்டிருந்த முறைகளே இன்னும் கொள்ளப்பட்டு வருகின்றன. விவசாயத்துறை செழுமையுறுமாயின் நமது நாடுஞ் செழுமையதாகி விடும் என்பதில் ஐயமில்லை.

**கிராமங்களே இந்தியாவின் இதயம்**

கிராமங்கள் தான் இந்தியாவின் இதயம் என்கிறார்கள்
இதயத்தை மூடித்தானே வைக்க வேண்டும் - அதனால் தான்
கிராமத்தைக் குழிதோண்டி மூடி வைக்கிறார்கள்
மாண்புகளின் நிழலில் செல்வத்தின் வெளிச்சம்
மருந்துக்கு கூடக் கிராமத்தின் மீது
விழுவதே இல்லை 13

கிராமங்களே இந்தியாவின் இதயம் என்று பிறைசூடன் வர்ணிக்கின்றார். இதயம் மூடி இருப்பதைப் போன்று இந்தியாவையும் குழி தோண்டி மூடி வைப்பதாகச் சாடுகின்றார்.
"கிராமங்கள் நாட்டின் செல்வம், நமது வாழ்வின் களஞ்சியம், ஆனால் அவைகளின் நிலை, அங்குள்ள மக்களின் நிலமை வர்ணிக்க முடியாத சோகக்காட்சிகள்"14
என்று அறிஞர் அண்ணா குறிப்பிடுவது இங்குச் சிந்திக்கத் தக்கது.

நாட்டின் முதகெலும்பு உழவர்களே உழவர்கள் நாட்டின் முதகெலும்பு என்றார்கள்
முதகெலும்பைத் திரும்பிப் பார்க்க முடியும் ? அதனால் தான் உழவரை அவர்கள்
ஒருபோதும் திரும்பிப் பார்ப்பதே இல்லை பழக்கமும் இல்லை 15

உழவர்கள் நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள் என்கிறார். அரசியல்வாதிகளோ கிராமத்தின் பக்கம் மருந்துக்குக்கூட வருவது இல்லையென்று சாடுகின்றார். எத்தனையோ திட்டங்கள் அவர்களை வந்து அடைவதே இல்லை. முதகெலும்பைத் திரும்பிப் பார்க்க முடியுமா ? அதுபோலத் தான் உழவர்களைத் திரும்பிப் பார்ப்பதே இல்லை என்று வேடிக்கையாகக் குறிப்பிடுகின்றார்.

"தொழிலாளரின் துயரம், உழவரின் ஏக்கம், கடும்புயலென காட்டாற்று வெள்ளமென உருவாகிறது. அரசாங்கமோ, அமைதியை நிலைநாட்ட அவசரச் சட்டம், பாதுகாப்புச் சட்டம் என்ற தீப்பொறிகளை மக்கள் மனம் என்னும் எண்ணெய் கிடங்கில் பறக்கவிட்டபடி உள்ளது.

**ஏழைகளின் கண்ணீரே தேசிய நீரோட்டம்**

காவேரியில் நீரில்லையாம்
கண்ணீரால் நிரப்பினால்
காலத்திற்கும் கவலையில்லையாம்
தேசிய நீரோட்டம் என்பது

ஏழைகளின் கண்ணீர்தானம்
தேர்தலில் மட்டும்தான்
அங்குத் தேரோட்டமாம்
அவன் என்று சிரிப்பது !
இறைவனை என்று காண்பது?16

தேசிய நீரோட்டம் என்பது ஏழைகளின கண்ணீர்தான் என்கிறார். ஏழைகள் சிரிப்பில் இறைவனைக் காண்பதாகக் கூறுகிறார். அவன் என்று சிரிப்பது? இறைவனை என்று காண்பது என்று ஏக்கப் பெருமூச்சு விடுகிறார் கவிஞர்.

"உழவனின் உள்ளத்திலே புயல்"17 இருக்குமானால், வயலிலே வளம் காண முடியாது என்பது அண்ணாவின் கருத்து. மேலும் அவர், "சலிப்பும், சோகமும் நிரம்பிய விவசாயி ஒரு புறமும், அதிகாரமும், ஆணவமும் கொண்ட நிலப்பிரபு மற்றோர் புறமும் ! நிலம் அவர்கள் இருவருக்கு இடையிலும் சிக்கிக் கொண்டு இருந்தால் விவசாயம் எப்படி வளமுள்ளதாக முடியும்"18 என்று கேட்கிறார்.

காஞ்சிபுரத்தில் 1925 ஆம் ஆண்டு நவம்பர் 21, 22 இல் நடந்த 31வது தமிழர் மகாநாட்டில் பேசிய தமிழ்த்தென்றல் திரு.வி.க. பயிர்த் தொழிலையும், நெய்தற்றொழிலையும் பற்றியும் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்.
"பயிர்த் தொழிலும் நெய்தற் தொழிலும் நமது நாடடின் வல, இட நுரையீரல்களாக விளங்குகின்றன. பயிர்த்தொழிலில் பெருங்கவனம் செலுத்துதல் வேண்டும். அதைப் பெருக்கப் புதுப்புது முறைகள் காணப்படல் வேண்டும். இந்தியாவில் எவ்வளவோ நிலங்கள் பசும்புற்றரையாய்க் கிடக்கின்றன. அவற்றையெல்லாம் பண்படுத்தி விளைநிலமாக்க முயல்வது சிறப்பு. விவசாய ஊர்களுக்கும், புது முறையில் முயற்சி செய்யப்படின் நாட்டு மக்கள் வெளிநாடுகளுக்குக் கூலிகளாகப் போய் வருவார்களோ? விவசாய வளர்ச்சி நாடி உழைக்க வேண்டுவது நம் பெருங்கடமை"19 என்கிறார். விவசாய மேம்பாட்டுக்கு வழி என்ன ? என்று ஆய்ந்து அறிதல் நலம், இதனை, "நமது நாடு விசித்திரமான நாடு, இந்த நாட்டில்தான் வளம் கொஞ்சுகிறது : ஆனாலும் உணவும் பிரச்சனை தலைத் தூக்கி இருக்கிறது. வற்றாத நதிகள் ஓடுவது இந்த நாட்டில் தான், அனாலும் பஞ்சம் தலை விரித்தாடுவதும் இந்த நாட்டில்தான் நல்ல மருத்துவர்கள் வாழ்வதும் இந்த நாட்டில்தான் ! இந்த ஆனாலும் என்பதற்கு என்ன பொருள் எனக் கண்டறிந்து அதைத் தீர்ப்பது தான் நமது முதற்கடமையாகும்"20 என்னும் உரையின்
வழி அண்ணா தெளிவுப்படுத்துகிறார்.

"சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"21

என்று உழவுத் தொழிலே உலகின் தலையாயத் தொழில் என்றும்,

"உழவார் உலகத்தார்க்கு ஆணிஅ∴தற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து"22

என்ற குறள் மூலம் உழவுத் தொழிலை மேற்கொள்ள முடியாது. பிறதொழிலைச் செய்கின்றவர்களையும் உழவர்கள் தாங்குவதால். உழவர்கள் உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர்கள் என்றும் வள்ளுவர் கருத்துரைக்கின்றார்.

**சமதர்மச் சிந்தனை**

சமதர்மம் ருசிகரமான வார்த்தை-நாட்டிலே இன்று பலராலும் மேம்பட்டு வரும் இலட்சியம். பலராலும் என்றாலும் உண்மையிலேயே அந்த உயர்ந்த இலட்சியத்தின்படி சமூகம் திருத்தி

அமைக்கப்பட வேண்டும். மக்களுக்குள் எந்தக் காரணங்கொண்டும் பேத உணர்ச்சியோ, அதனாலான கேடுகளோ இருந்தால் கூடாது. வாழ வேண்டும் பிறர் வாழ்வைக் கெடுக்காமல் என்ற சிறந்த நோக்கம் வேண்டும். நாட்டில் சாதியின் பெயராலே, மதத்தின் பெயராலே ஒருத்தருக்கொருத்தர் அடித்துக் கொண்டு இருப்பதைக் கண்ட கவிஞர் அந்த மக்களின் நிலைக் கண்டு. இவர்கள் திருத்தும் நாள் எந்தாளோ? இவர்கள் மக்கள் அனைவரும் ஒருவரே
தங்களுக்குள் வேறுபாடு பாராட்டக் கூடாது. என்று அறியும் நாள் எந்நாளோ? என்று உள்ளம் குமுறி கீழ்க்கண்ட கவிதையின் வாயிலாக விளக்குகின்றார்.

ஒன்றே குலம் !
ஒருவனே தேவன் !
உண்மை என்றால்
ஊருக்கு ஓர் ஆலயம் போதும் - இல்லை
அவரவர்க்கு ஓர் ஆலயம் போதும்
பாட்டன் பூட்டன் கட்டியதைப்
பத்திரமாக வைத்துக்கொள்ளு
பக்தி என்றால் என்ன என்று அந்தப்
பரதேசியிடம் கொஞ்சம் சொல்லு
முக்தியில் வந்து ஆவதென்ன அந்த
முட்டாளைக் கடமையைச் செய்யச் சொல்வது
நாட்டுக்கும், வீட்டுக்கும் உழைப்பது தான்
நல்லவனே ! உயர் பக்தியாகும்

நல்லதை நினைத்து நல்லதைச் செய்தால்
கிடைப்பது கோடி சக்தியாகும்
வீதிக்கு வீதி கோயில்கள் ஏன்-அட
வெற்றிடம் கிடைத்தால் கட்டுவதேன்
சாதிக்கோர் கோயிலை இடித்திடுக-அங்கு
நல்லவரைக் குடியேற்றிடுக
விளக்கில்லா கோயிலை காத்திடுக-உன்
வேலையை அங்கே காட்டிடுக23

'வெற்றிடம் கிடைத்தால்' என்ற தலைப்பில் அமைந்த கவிதையில் சமதர்ம சிந்தனையை ஊட்டுகிறார். பக்தி என்றால் என்ன என்று விளக்குகிறார். நேர்காணலின் போது இவ்வாறு பக்திக்கு விளக்கம் தருகிறார். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்கிறார். ஒரு கோபுரம் இருக்கிறது. அதற்கு குடமுழக்கு நடத்துகிறார்கள். அதற்கு சாரங்கள் கட்டுகிறார்கள். அந்தக் கோபுரம் என்பது இறைவன் அல்லது ஆன்மிகம் என்று வைத்துக் கொண்டால் ஏறுகின்ற காரணங்களே அந்த மார்க்கங்கள் என்று சொல்லலாம்.
அது இஸ்லாமாக, பௌத்தமாக, சமணமாக, கிறிஸ்தவர்களாக, இந்துவாக என்று எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். எல்லோருமே சாரத்தில் நிற்கிறார்களே ஒழிய அந்த மார்க்கத்தை அடையவில்லை.
இதனால்தான் திருமூலர்

"ஆரறிவார் எங்கள் அண்ணாவின் பெருமையை
ஆரறிவார் அதன் அகலமும் நீளமும்
வேரறியாத பெரும் சுடர் ஒன்று - அதன்
வேரறியாமல் விளம்புகின்றேனே"24

என்று குறிப்பிடுகின்றார். அதிலேயே இஸ்லாமில் சொல்வார் 'அல்லா நூருல் சமாவாஸ்தி வல்லவன் - இதற்கு அண்டங்களின் பேரொளியாக இறைவன் உள்ளான்'25 என்பர்.

'கிறிஸ்தவர்கள் நானே நித்தியமும், ஜீவனும், ஒளியுமாய் இருக்கிறேன்'26 என்பர். பேரொளியைத்தான் இறைவன் என்கின்றனர். ஒளியற்ற இறைவனுக்கு உருவத்தைப் படைத்து அதற்காக ஒரு சண்டையை இவர்கள் கற்பித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஒரு பகவத் கீதையைப் படிப்பதற்கு தயாராக இருக்கும் இந்து, குரானை படிப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும். குரானைப் படிப்பதற்கு உறுதியாக இருக்கும் முஸ்லீம் பகவத்கீதையைப் படித்தால் ஒரீராம் என்று சொல்லக்கூடிய தீண்டாமை விலக்கப்படுகிறது என்கிறார்கள். அவர்கள் பைபிளையும் படிக்கத் தயாராக இருக்க வேண்டும் என்கிறார்.

"அன்பே சிவம் என்பதை யாரும் அறியவில்லை
அன்பே சிவம் என்பதை யாரும் அறிந்தபின்
அன்பே சிவம் என்று அமர்ந்திருந்தாரே"27

என்ற திருமூலரின் வார்த்தையை நினைத்து இருந்தால் இன்று அடிப்படையாக இருக்கும் அன்பை விட்டுவிட்டு மத மதமாற்றத்திற்காக ஒருத்தன் துப்பாக்கியைத் தூக்க வேண்டியதில்லை. இஸ்லாத்தில் மிக அடிப்படையாகச் சொல்லக் கூடியது அன்பு. பக்கத்து வீட்டில் சமைக்காமல் இருக்கும் போது நீ விருந்து சாப்பிட்டால் ஒரீராம் என்று சொல்லக்கூடிய பாவம் உண்டாகும். இதனை ஏற்கக் கூடாது என்கிறார்கள். அந்த இஸ்லாத்தில் பிறந்தவர்கள் இன்று துப்பாக்கியைத் தூக்குகிறார்கள். பாவிகளை இரட்சியுங்கள் என்று இயேசு வழியில் வந்தவர்கள் இன்று இஸ்ரேலுக்கும். பாலஸ்தீனத்திற்கும் இடையில் சண்டையிட்டுக் கொண்டு உள்ளனர். பார்ப்பவர்களுக்கு எல்லாம் கருணாமூர்த்தியாக இருந்த ராமன் பெயரிலே இன்று யுத்தம் நடக்கிறது. இதற்கு அடிப்படை ஒருவரை ஒருவர் உணர்ந்து கொள்ளவில்லை. இதற்கு எடுத்துக்காட்டாக யாரும் இருக்க வில்லை. காந்தி, புத்தன் போன்றவர்கள் பிறந்த நாட்டிலே இன்று யுத்தம் நடக்கிறது என்று கவிஞர் உள்ளம் கூறுகிறார். அத்துடன் நில்லாமல் இதை யாராவது தட்டிக் கேட்க வேண்டும். அப்படித் தட்டிக் கேட்பவர்க்குத் தனிமனித ஒழுக்கம் வேண்டும். தனிமனித ஒழுக்கம் இல்லாதவனெல்லாம் தலைவன் ஆனதாலேயே இப்படி பிரச்சனைகள் ஏற்படுகின்றன என்று சமதர்மச் சிந்தனையை மக்கள் உள்ளத்தில் ஏற்படுத்துகிறார் கவிஞர். ஒன்றே குலம்! ஒருவனே தேவன்!! என்பது கவிருக்கு உடன்பாடான கருத்து. அதனை வலியுறுத்திப் பாடல் அமைக்கிறார்.

**அரசியல் சீர்கேடு**

இன்றைய சூழ்நிலையில் மக்களாட்சி நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. மக்கள் தங்களுக்காகத் தேர்ந்தெடுக்கும் தலைவர்கள் மக்களுக்காக உழைக்காமல் தங்கள் வீட்டின் முன்னேற்றத்திற்காக உழைக்கின்றார்கள். மக்களிடம் வாக்கு பெறுவதை மட்டுமே தங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளனர். இந்த இழிநிலையைக் கவிஞர் நமக்கு ஊணர்த்துகிறார்.

இவன் வயிற்றுப் பிச்சைக்காரன்
இன்னொருவன் வாக்குப் பிச்சைக்காரன்
முன்னவனால் கெடுதல் செய்சதே வாழ்க்கை எல்லை
இரண்டு குரலல்களும் ஒன்றாய்த்தான் கேட்கிறது
இரண்டு சுட்டமும் கையேந்தியே நிற்கிறது
இவனோ வாழ்வில் கேவலம் ஆகிறான்
அவனை ஒரு ரூபா அள்ளிக் கொடுத்தேன்
அப்பால் நகர்ந்தேன் நெஞ்சு வலித்தது
அப்பாவி பாவம் என்மனம் சிரித்தது 28

வயிற்றுப் பிச்சைக்காரன் வாக்குப் பிச்சைக்காரன் என்று, இன்றைய இந்தியாவின் நிலையையும் இன்றைய அரசியல்வாதியின் நிலையையும் 'தெளிவாக அவலக்குதல் என்ற தலைப்பில் அமைந்தக் கவிதையில் அழகாகச் சொல்லியிருக்கின்றார். இன்றைய அரசியல் வாதியின் அவருடன் உரையாடும் பொழுது தெளிவாக வெட்ட வெளிச்சமாக்குகிறார்.

**கவிஞரிடம் பேட்டி கண்ட வழிப் பெறப்பட்ட செய்தி**

"மக்கள் புரட்சி இல்லாமல், தட்டிக் கேட்க ஆள் இல்லாமல் திருந்த மாட்டார்கள். ஏழைகளுக்குக் கல்விக் கொடுத்த காமராசர் இறந்த பொழுது அவருடைய அறையில் இருந்தது 10 வேட்டி சட்டையும் 130 ரூபாய் பணமும்தான். அவர் தமிழக முதலமைச்சராக இருந்தவர் ஆனால் அன்றைக்குச் சாதாரணமாக ஒரு கிராமத்தின் சாதாரண அதிகாரி என்று சொல்லப்படக்கூடியவரின் சொத்துக்கள் எண்ணிலடங்காதவையாக இருக்கின்றன. உல்சாரிலால் நந்தா என்பவர் தறிகாலிகப் பிரதமராக இருந்தவர். வாடகை கொடுக்க முடியாமல் பெட்டியைத் தூக்கி வெளியே வீசி விடடார்கள். நம் நாட்டுப் பிரதமராக இருந்தவர் லால் பகதூர் சாஸ்த்திரி பதவியை விட்டு வெளியில் போகும் போது ஒரு ரிக்ஷாவில் தன் சாமான்களை ஏற்றிச் சென்றார். இந்த நாட்டில் அமைச்சராக இருந்த கக்கன் பதவியை விட்டு பேருந்தில் செல்ல நிலையத்தில் நின்று கொண்டு இருந்தார். இப்படி பல தலைவர்கள் வாழ்ந்த இந்தப் பூமியில் ஒரு சாதாரண பதவியிலோ, அரசியல் கட்சியின் உறுப்பினராகவோ இருந்தால் அவன் லட்சாதிபதியாவது மிக எளிதாக இருப்பது எப்படி?"29
மக்கள், எவன் எப்படி போனால் என்ன? அவங்க மனநிலை தன்னுடைய காரியம் நடந்தால் போதும். இராமன் ஆண்டா என்ன? இராவணன் ஆண்டா என்ன? என்று இருப்பது தான். நாம் நூறு வருடம் வாழப் போவது இல்லை. ஆனால் யாருமே சமூக அக்கறை இல்லாமல் உள்ளனர். இன்றைக்கு உள்ள அரசியல்வாதிகள் யாருமே சுயநலமில்லாதவர்கள் என்று சொல்வதற்கில்லை.

அளவுகள் விகிதங்கள், விகிதாச்சாரங்கள், விழுக்காடுகள் மாறுபடுகின்றன. யாரும் தட்டிக் கேட்கவில்லை என்று இன்றைய அரசியல்வாதிகளின் நிலையைத் தெளிவாக கூறுகிறார். இதுவே இந்த சமுதாயத்தின் அவலநிலை என்றும் சாடுகிறார். ச. முத்துக்குமரன், 'மக்களுக்கு வழிக்காட்டும் தலைவர் வேண்டும்' என்ற தலைப்பில்.
"நாடு முறையாக முன்னேற வேண்டும் என்றும், நியாயம் வழங்குவதை வன்முறையாளர் தம் கையில் எடுத்துக் கொள்ளக் கூடாது. நாம் விரும்பினால் மக்களின் தலைவராக ஆக நினைப்பவர்கள் மக்கள் சொல்வதைப் பின்பற்ற அறிந்து இருக்க வேண்டும். தலைவர் தம்முடைய கருத்துக்களைச் சொல்லிய பின்னும் மக்கள் செல்லக்கூடாது. நாட்டின் முக்கியப் பிரச்சினைகளில் மக்கள் விரும்புக் தீர்ப்புகள் சரியல்ல என்று தலைவர் நம்பினால் மக்கள் விருப்பத்திற்கு எதிராக முடிவெடுக்க தயங்கக் கூடாது"30 என்று குப்பிடுகின்றார்.

ஒரு நிறுவனத்தில் பணியாற்றுபவர்களோ, ஒரு நாட்டு மக்களோ வழி தவறிப் போகின்றபோது அவர்களுக்கு நேர்வழியை உயர் பண்புகளை உயர் நோக்கங்களைச் சுட்டிக் காட்டவும் அவ்வழியில் நடத்திச் செல்லவும் அந்நிறுவனத் தலைவர். அல்லது அந்நாட்டுத் தலைவர் தயங்கக் கூடாது. அவ்வாறு செய்யத் தயங்கினாலோ, தவறினாலோ அவர் தலைமைப் பதவியை வகிக்கும் தகுதியை இழக்கிறார். அந்த நிலையில் தலைவர் மாற்றப்படவில்லை எனில் அந்த நிறுவனம் அல்லது அந்த நாடு சிறுமையடையும் மறையவும் மறையலாம். நாம் சார்ந்த நிறுவனமும். நம் நாடும் முன்னேற வேண்டுமாயின் நாம் நேர் வழியை உயர் பண்புகளை உயர் நோக்கங்களை அறியும் திறன் பெற வேண்டும். அவ்வாறான திறன் படைத்தவர்களையே தலைவராக ஏற்க வேண்டும்31 என்று மகாத்மா காந்தியடிகள் விரும்புகின்றார். இவை பிறைசூடன் கவிதைகளில் மிளிர்வதைக் காண முடிகிறது.

**சாதிப் பிரச்சினை**

சாதி என்னும் பெயரால் இந்நாட்டில் எத்துணையோ பிரிவுகள் உள்ளன. மொழியாலும், இனத்தாலும், சமயத்தாலும் வேறுப்பட்ட இந்நாட்டு மக்களிடையே அதிகமான பிளவுகளை

பிரிவுகளை உண்டாக்கியது சாதியே. இந்நாட்டின் பெருமைகள் கெடும் வகையில் சாதிகள் நாட்டைக் கெடுத்துவிட்டன. சாதிப் பிரிவுகளால் தாழ்வுற்ற நாடு இந்திய நாடே. கவிஞர் பிறைசூடன் இந்த சாதிப் பிரச்சனையை ஒழிக்க புதுவிதமான சிந்தனையை நம்மிடையே வைக்கின்றார்.

எண்ண எண்ண மாளாத சாதிகள்
என்றும் மறையாத அந்திகள்
உள்ளில் படர்ந்து உள்ள பாசிகள் - இவை
ஒரு நாளும் ஒழியாத வேசிகள்
கோட்டையிலே இருப்பவரும் தூண்டுகோள் - பெண்
கொடுப்பதற்கும் எடுப்பதற்கும் அளவுகோல்
நாட்டையின்று ஆட்டி வைக்கும் மாயக்கோல் - இதை
நம்பாமல் எவன் பிடித்தான் செங்கோல்?
படித்தவனே வளர்க்கின்ற கொடுமைகள் - தன்
பகட்டிற்காக விரும்புகின்ற அவலங்கள்
அடிதடிக்கு விதைபோடும் சேதிகள்
அய்யகோஸ இவையிங்கு நீதிகள்
சான்றிதழில் பவனிவரும் ஈனங்கள்
நம் சரித்திரத்தில் இவை அகலா ஊனங்கள்
சான்றாரே தூக்கியிதை வீசுங்கள் - பின்
சபையேறி அறிவிரையைப் பேசுங்கள் 32

என்று கூறுவதன் மூலம் இந்தச் சமூகத்தில் நிலவும் மிகப்பெரிய பிரச்சினையான சாதிப் பிரச்சினையை முன் வைக்கின்றார். எண்ணில் அடங்காமல் எத்தனையோ சாதிகள் பாசியை போல் படர்ந்துள்ளன. திருமணங்களும், மற்றும் வாழ்க்கையில் நடக்கும் அனைத்து நிகழ்ச்சிகளும் சாதியை மையமாக வைத்தே நிகழ்கின்றன. இந்தச் சாதியை ஒழிக்க முடியாததற்கு முக்கியக் காரணம் பள்ளிக்கூட சான்றிதழில் சாதியைக் குறிப்பிட வேண்டும் என்று கட்டாயப்படுத்துகின்றார். இவ்வாறு படித்தவரே ஜாதியை உரம் போட்டு வளர்க்கின்ற கொடுமைகள் நிகழ்கின்றன என்கிறார். சான்றிதழில் உலாவரும் சாதியாகிய ஈனத்தினை ஒவ்வொருவரின் சரித்திரத்திலும் இவை அகலாத ஊனங்கள் என்கிறார். படித்தவர்களே முதலில் இதை வீசி எறியுங்கள். அதன் பிறகு சபையினிலே அறிவுரையைப் பேசுங்கள் என்கிறார்.

## முடிவு

இன்றைய சமுதாயப் பிரச்சனைகளான இளைஞர்களின் நிலை, ஏழை – விவசாயிகளின் அவலக்குரல், சமதர்மச் சிந்தனை, இன்றைய சமுாயத்தின் அவலநிலை, சாதிப் பிரச்சனை போன்ற பிரச்சனைகள் கவிஞர் பிறைசூடன் கவிதைகள் மூலம் எவ்வாறு சமூகத்துக்குப் பயன்படும் வகையில் கூறப்பட்டுள்ளன என ஆராயப் பெற்றன.

### குறிப்புகள்

1. சோ. பார்வதி. மேத்தாவின் கதைப்பொதிப் பாடல்கள் ஓர் ஆய்வு. ப.28
2. மேற்படி
3. கவிஞர் பிறைசூடன், நேர்காணலின் பொழுது கூறியவை
4. கவிஞர் பிறைசூடன், பி.சூ.க., ப. 43
5. மேற்படி
6. கவிஞர் பிறைசூடன், நேர்காணலின் பொழுது கூறியவை
7. மேற்படி

8. அ. தமிழ்க்கண்ணன், வளம் தரும் வாழ்க்கை, ப.2
9. குறள் 611
10. அ. தமிழ்க்கண்ணன், மு.நூ., ப.31
11. குறள் 616
12. பி.சூ.க. ப.54
13. மேற்படி
14. அன்புப் பழம் நீ, அண்ணாவின் மணிமொழிகள், ப.53
15. பி.சூ.க., ப.54
16. அன்புக் பழம் நீ. மு.நூ., ப.53
17. பி.சூ.க., ப.55
18. அன்புப் பழம் நீ. மு.நூ., ப.55
19. மேற்படி
20. திரு.வி.கல்யாணசுந்தரனார், தமிழ்த்தென்றல் அல்லது தலைமைப் பொழிவு, ப.125
21. குறள், 1031
22. குறள், 1032
23. பி.சூ.க., ப.94
24. கவிஞர் பிறைசூடன் நேர்காணலின் பொழுது கூறயவை
25. மேற்படி
26. மேற்படி
27. மேற்படி
28. பி.சூ.க., ப.50
29. கவிஞர் பிறைசூடன் நேர்காணலின் பொழுது கூறியவை
30. ச. முத்துக்குமரன், மக்கள் வாழ்வு மலரட்டும், ப.193
31. மேற்படி
32. பி.சூ.க., ப.96